DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.193/2018**

Deposition of :PW -12

| | | |
|---|---|---|
| Name | : உமாசங்கர் | Caste: |
| Father's / Husband Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 10th day of March 2025.

Accused present.

**முதல் விசாரணை :–**

நான் கடந்த 30.09.2023 அன்று விழுப்புரம் மாவட்ட துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்றுவிட்டேன். தற்போது சேலத்தில் வசித்து வருகிறேன். கடந்த 25.06.2017 அன்று வாழப்பாடி காவல்ஆய்வளராக பணிபுரிந்தபோது அன்றை தினம் மாலை 5.00 மணியளவில் முத்தம்பட்டி கிராமநிர்வாக அலுவலர் திரு.கோகுலவாசன் என்பர் கொடுத்த எழுத்துமூலமான புகாரின்பேரில் உதவி ஆய்வாளர் சுந்தர்ராஜன் அவர்கள் வாழப்பாடி காவல்நிலைய கு.எண்.315/2017 இத.ச.302 ன்படி வழக்கு பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்திருந்ததை நான் விசாரணைக்கு எடுத்துகொண்டேன்.

25.06.2017 காலை 8.30 மணி அளவில் இந்த வழக்கின் சம்பவ இடமான மன்னாய்கன்பட்டி தீப்பெட்டி கம்பெனி அருகிலுள்ள எதிரி தனலட்சுமியின் வீட்டை பார்வையிட்டு சாட்சிகள் பெரியசாமி மற்றும் கும்பலிங்கம் ஆகியோர் முன்னிலையில் பார்வைமகஜர் அ.சா.ஆ.12 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.13 ஆகியவை தயார் செய்தேன். பின்னர் சேலம் அரசுமருத்துவமனை சென்று இந்த வழக்கில் இறந்துபோன முருகேசன்

என்ற பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்பு பார்வையிட்டு பிரேதவிசாரணை அறிக்கை அ.சா.ஆ.14 தயார் செய்தேன். மேலும் சாட்சிகள் விஜயன், பிரசாந்த், சுப்ரமணி, தங்கவேல் மற்றும் பழனிசாமி ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் தாயார்செய்தேன். பிரேதவிசாரணை முடித்து பிரேத பரிசோதனைக்காக த.கா.1195 சின்னையன் என்பவர் மூலம் எனது வேண்டுகோள் கடிதத்துடன் பிரேதத்தை ஒப்படைத்தேன்.

பின்னர் இந்த வழக்கில் தொடர்புடைய எதிரி தனலட்சுமி என்பவர் சி.என் பாளையம் பேருந்து நிறுத்தில் இருப்பதாக தகவல் தெரிந்து 25.06.2017 அன்று பகல் 1.30 மணியளவில் விசாரித்தேன். அவர் குற்றத்தை ஒப்புகொண்டதால் அவரை கைது செய்தேன். பின்னர் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகள் கோகுலவாசன் மற்றும் மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்துசென்றால் தன் கணவரை கொலை செய்ய பயன்படுத்திய தடயத்தை எடுத்து ஆஜர் படுத்துவதாக சொன்னார். அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் எதிரி மற்றும் சாட்சிகளுடன் மாலை 4 மணியளவில் எதிரி தனலட்சுமி வீட்டின்பின்புறம் வீட்டிற்கு கிழக்குபுறமுள்ள மாமரத்தின் அடியிலிருந்து சுமார் 54 செ.மீ அகலமும், 132 செ.மீ நீளமும் உள்ள பச்சை கலர் துப்பட்டா ஒன்று ரத்தகரையுடன் இருந்த ஒன்றையும், மற்றும் சுமார் 112 செ.மீ அகலமும், 510 செ.மீ நீளமும் கொண்ட கத்திரிப்பூ கலர்பூ போட்ட சேலை ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றிய சான்று பொருட்களை நீதிமன்றத்தில் 25.06.2017 அன்று நீதிமன்றனத்தில் படிவம் 95 மூலம் ஒப்படைத்தேன்.

11.07.2017 அன்று எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ரத்தகரை படிந்த துப்பட்டாவை ரசாயன ஆய்விற்காக நீதிமன்ற உத்தவு பெற்று சேலம் வட்டாரதடயஅறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைக்கப்பட்டது. அந்த வேண்டுகோள்

கடிதம் அ.சா.ஆ.15. அதேபோல் பிரேதத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை ரசாயான ஆய்விற்காக நீதிமன்ற உத்தரவு படி 05.10.2017 அன்று சேலம் வட்டாரதடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். இந்த வழக்கில் பிரேதபரிசோதனை மேற்கொண்ட டாக்டர். சங்கீதா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரிடமிருந்து பிரேபரிசோதனை அறிக்கை பெற்றேன். 30.06.2017 அன்று இந்த வழக்கில் பிரேதத்தை சவகிடங்கிற்கு அனுப்பி வைத்த டாக்டர்,அருண்பிரபாகரன் என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரிடமிருந்து விபத்து பதிவேடு நகல் பெறப்பட்டது.

24.10.2017 அன்று இந்த வழக்கில் ரசாயஆய்வு மேற்கொண்ட அறிவியல் ஆய்வாளர் திரு.மாணிக்கம் என்பரை விசாரித்து ரசாயனஆய்வறிக்கை பெறப்பட்டது. என்னிடம் காட்டப்படும் மேற்படி துப்பட்டா குறித்த அறிக்கை அ.சா.ஆ.16. என்னிடம் காட்டப்படும் பையாலஜிக்கல் ஆய்வறிக்கை அ.சா.ஆ.17. மேலும் இந்த வழக்கில் செராலஜிக்கல் அறிக்கையின் படி டாக்டர்.சங்கீதா அவர்களிடமிருந்து இறுதிகருத்துரை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். மேலும் இந்த வழக்கில் பிரேபரிசோதனைக்கு உதவியாக இருந்த த.கா.1195 சின்னையன் என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சான்றுபொருட்களை கைப்பற்றியதற்கான படிவம் 95 அ.சா.ஆ.18.

முதல் தகவல் அறிக்கை தயார் செய்த உதவி ஆய்வாளர் சுந்தர்ராஜன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் எனது புலன்விசாரணையை முடித்து 05.11.2017 அன்று எதிரி மீது இத.ச.302 ன் படி இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகார் கொடுத்தது முருகேசனின் உறவினர்கள் அல்ல என்றால் சரிதான். காலை 6 மணிக்கு மாரிமுத்து முருகேசனை பார்த்ததாக சொல்லியுள்ளோம். அவர் அதே ஊரை சார்ந்தவர். கிராமநிர்வாக அதிகாரி கோகுலவாசன் தான் புகார் கொடுத்துள்ளார். புகார்மனு காலை 6 மணிக்கு எங்கள் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்று

சொன்னால் சரிதான். அந்த புகாரில் கழுத்தை சுற்றி இருக்கப்பட்ட காயத்தழும்புகள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நாங்கள் சொல்வதுபோல் துப்பட்டா மற்றும் சேலையால் இறுக்கப்பட்டதாக புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கொலைசெய்யப்பட்ட விவரம் தெரியவந்தது. அதனால் புகாரை பெற்று வழக்கு பதிவு செய்து விசாரணை தொடங்கினோம்.

தகவல் காலை 6 மணிக்கு கிடைத்ததாக முதல்தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் வழக்கு பதிவு செய்யப்பட்ட நேரம் 7 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரேதவிசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சாட்சிகளில் சுப்ரமணியத்தை தவிர வேறு நபர்களை நான் சாட்சியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வேறு நபர்கள் ஆஜர் இல்லாததால் நான் விசாரிக்கவில்லை.

முருகேசன் கை, கால்கள் கட்டப்பட்டு அதன் பின்பு கழுத்து இறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாக சொல்லியுள்ளோம் என்றும் ஆனால் அதுபற்றி முதல்தகவல் அறிக்கையிலும், புகாரிலும், மற்றும் சாட்சிகள் விசாரணையிலும் விவரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகள் கோகுலவாசன் மற்றும் மாரிமுத்து முன்பு பதிவு செய்தேன். எதிரியை சி.என்.பாளையம் பேருந்து நிறுத்தத்தில் கைது செய்தேன். நான் அழைத்ததால் சாட்சிகள் அங்கு வந்தார்கள். 1.30 மணிக்கு பிரேதபரிசோதனை ஆரம்பித்துள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திற்கு காலை சுமார் 8 அல்லது 8.30 மணிக்கு சென்று விசாரணை செய்தேன். சம்பவஇடத்திற்கும், காவல்நிலையத்திற்கும் சுமார் 4 கி.மீ தூரம் உள்ளது. காலதாமதம் எதுவும் இல்லை.

மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகில் குடியிருப்பதாக நான் குறிப்பிட்டுள்ள நபர்கள் யாரையும் நான் சாட்சியாக இறுதியறிக்கையில் குறிபிடபில்லை என்று சொன்னால் சம்பவ இடத்திற்கு அருகில் குடியிருப்புகள் அதிகம் இல்லை. ஆஜர்சாட்சிகளை மட்டும் தான் விசாரித்தேன். வெளியூரிலிருந்து வந்த முருகேசனின்

உறவினர்களை நான் சாட்சியாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் பார்வை மகஜர் சாட்சிகள் அதே ஊரை சார்ந்தவர்கள் தான். மாலை 4 மணிக்கு 25.06.2017 அன்று பொருட்களை நான் கைப்பற்றினேன். கைது செய்த பின்பு தான் எதிரியை அழைத்து சென்றுபொருட்களை கைப்பற்றினேன். பொருட்களை எதிரி அவரது வீட்டிற்கு பின்புறமுள்ள மாமரத்துக்கடியிலிருந்து எடுத்து ஆஜர்படுத்தினார். வழக்கு ஆவணங்களில் எதிரி மஞ்சள் பையில் இருந்து பொருட்களை எடுத்துகொடுத்தார் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி சான்றுபொருட்களை மஞ்சள் பையில் போட்டு மாமரத்துக்கடியில் வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பையில் என்று சொல்லியுள்ளார்.

பிரேதபரிசோதனை 26.05.2017 அன்று 11 மணிக்கு பிரேதபரிசோதனை ஆரம்பித்து 1.30 மணிக்கு பிரேதபரிசோதனை முடிந்ததாக ரசாயனபகுப்பாய்விற்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1.00 மணிக்கு முடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரிக்கும், அவரது கணவருக்கும் மாலை 4 மணி முதல் இரவு வரை சண்டை நடந்ததாக எனது விசாரணையில் சாட்சிகள் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். சாட்சிகள் கொலை நடந்த நேரத்தை குறிப்பிட்டு எனது விசாரணையில் சொல்லவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி கொலை நடந்துள்ள நேரத்தை சொல்லியுள்ளார். பொதுவாக கிராமநிர்வாக அலுவலகத்திற்கு அலுவலகர்கள் காலை 10.00 மணிக்கு தான் வருவார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்களின் பணி 24 மணிநேர பணி.

6 மணிக்கு புகார் கொடுத்தால் நாங்கள் 6 மணிக்கே பதிவு செய்வோம். கிராமநிர்வா அதிகாரி காலை 6 மணிக்கு வந்து எங்களிடம் புகார்கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நாங்களும் காலை 6 மணிக்கு வழக்கு பதிவு செய்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சண்டை நடந்ததால் பயம் காரணமாக எதிரி வெளியில் சென்றிருந்தார் என்றால் சரியல்ல.

எதிரியின் கணவர் குடிபோதையில் இருந்ததால் அவர் தற்கொலை செய்திருக்கலாம் என்றால் சரியல்ல. நான் போய் பார்த்தபோது வீடு திறந்திருந்தது.

வீட்டில் பிரேதம் கிடந்தது. பணத்திற்காக ஒரு மூன்றாம் நபர் முருகேசனை கொலைசெய்திருக்கலாம் என்றால் சரியல்ல. எதிரிக்கும், அவரது கணவருக்கும் நீண்டகாலமாக பிரச்சனை இருந்து வந்தது என்றும், எதிரி கொலை செய்ய வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல.

பிரேதபரிசோதனை அறிக்கை படி முருகேசனுக்கு கழுத்தை சுற்றி சிராய்ப்பு காயங்கள் தான் இருந்தது என்றும், அதனால் துப்பட்டாவில் ரத்தம்வர வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. மருத்துவ அறிக்கையில் கயிறால் இறுக்கப்பட்டு பிரௌன்நிற இறுக்கப்பட்ட காயங்களுடன் கொலை நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை மிரட்டி நான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிக்கும் இந்த கொலைக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், எனக்கு தடயம் எதுவும் கிடைக்காததால் எதிரி மீது இந்த வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி மீது தேவையில்லாமல் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/– L. Kalaivani,
III Additional District Judge,
Salem.